# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2394/52 - 2024 ජූලි මස 26 වැනි සිකුරාදා - 2024.07.26

*2394/52 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு யூலை மாதம் 26 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**சனாதிபதித் தேர்தல் - 2024**

**1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, சனாதிபதித் தேர்தல்கள் சட்டம்**

8 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் கட்டளை வெளியிடப்பட்ட நாளான 2024.07.26 ஆந் ஆந் திகதிக்கும் பெயர் குறித்த நியமன நாளான 2024.08.15 ஆந் திகதிக்கு முன்னைய நாளான 2024.08.14 ஆந் திகதி நண்பகல் பன்னிரண்டு மணிக்கு முன்னர் அல்லது அதற்கிடைப்பட்ட காலப்பகுதியினுள் அலுவலக நாட்களில் (சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை நாட்கள் தவிர்ந்த) மு. ப. 8.30 மணி முதல் பி.ப. 4.15 மணி வரையும், 2024.08.14 ஆந் திகதி மாத்திரம் மு.ப. 8.30 மணிமுதல் நண்பகல் 12.00 மணி வரையும் சனாதிபதித் தேர்தலுக்காக வேட்பாளரொருவரால் அல்லது வேட்பாளர் சார்பாக வேறொருவரால்,

(அ) அந்த வேட்பாளர் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியொன்றினால் பெயர்குறித்து நியமனம் செய்யப்பட்ட வேட்பாளரொருவராயின், செல்லுபடியான பணத்தால் ஐம்பதாயிரம் ரூபாவும்;

(ஆ) அந்த வேட்பாளர் வேறேதும் அரசியற் கட்சியொன்றினால் அல்லது வாக்காளரொருவரினால் பெயர்குறித்து நியமனம் செய்யப்பட்ட வேட்பாளரொருவராயின், செல்லுபடியான பணத்தால் எழுபத்தையாயிரம் ரூபாவும்;

தேர்தல் ஆணைக்குழுவிடம் அல்லது குறித்த கடமைக்காக தேர்தல் ஆணைக்குழுவினால் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள எவரேனுமொருவரிடம் அல்லது இராஜகிரிய, சரண மாவத்தையில் அமைந்துள்ள தேர்தல் ஆணைக்குழு அலுவலகத்தில் வைப்புப் பணமாக வைப்பிலிடப்பட வேண்டுமென; அல்லது வைப்பிலிட தயாராக வேண்டுமென; 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின் 8 ஆம் பிரிவுக்கமைய அறிவித்தல் வழங்கப்படுகின்றது.

**ஆர். எம். ஏ. எல். ரத்நாயக்க,**
தவிசாளர்,
தேர்தல் ஆணைக்குழு.

**எம். ஏ. பீ. சீ. பெரேரா,**
உறுப்பினர்,
தேர்தல் ஆணைக்குழு.

**அமீர் பாயிஸ்,**
உறுப்பினர்,
தேர்தல் ஆணைக்குழு.

**ஏ. சண்முகநாதன்,**
உறுப்பினர்,
தேர்தல் ஆணைக்குழு.

பேராசிரியர் **லக்ஷ்மன் திசாநாயக்க,**
உறுப்பினர்,
தேர்தல் ஆணைக்குழு.

தேர்தல் ஆணைக்குழு,
தேர்தல் ஆணைக்குழு அலுவலகம்,
சரண மாவத்தை,
இராஜகிரிய,
2024, யூலை 26.


1A - G 42318 — 604 (2024/07)
இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*